Registered as a News Paper | பக்கங்கள் 06 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 10 | (26 - 09 - 1992) | சனிக்கிழமை | ஓசை 221

நாகம ... வாசிகசன நூலகம்
மாநகராட்சி மன்று
26 - 9 - 1992
யாழ்ப்பாணம்

## கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் அவசரகால விதிமுறைகள்

(கொழும்பு)

ஏற்றுமதித் துறையில் சிறிலங்கா அரசு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிமுகப்படுத்தியுள்ள விதிமுறைகளுக்குத் தொழிற்சங்கங்களும், மனித உரிமைக் குழுக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஏற்றுமதித் துறையில் கடந்த ஆகஸ்ட் 22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசினால் கொண்டு வரப்பட்ட அவசர கால நிலையை வாபஸ்பெறுமாறு கோருவதற்காக ஐம்பதுக்கும் அதிகமான தொழிற்சங்கங்களும், மனித உரிமைக்குழுக்களும் நேற்றுக் கொழும்பில் கூடின. இந்தப் புதிய அவசரகால விதிமுறைகள் (5 ஆம் பக்கம் பார்க்க)

## ( பூநகரி முகாம்மீது புலிகள் பாய்ச்சல் )

# இருமினிமுகாம்: 62காவலரண்கள் தகர்ப்பு

# 25 ராணுவத்தினர் பலி; பலர் படுகாயம்

## சிங்களப்படை சிதறி ஓட்டம்

[நமது நிருபர்]

பூநகரி பள்ளிக்குடா இராணுவ முகாமின்மினிமுகாம்கள்மீதும், தொடர் காவலரண்கள் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் சிங்கள இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பும், இராணுவத் தளபாட இழப்பும் ஏற்பட்டது. நேற்று அதிகாலை 12. 55 இற்கு ஆரம்பித்து சுமார் இரண்டு மணித்தியாலங்கள்வரை இடம்பெற்ற உக்கிர மோதலின் போது இரண்டு மினிமுகாம்களையும், 62 காவலரண்களையும் புலிகள் தாக்கி அழித்தனர். இம் மோதலில் குறைந்தது 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் இத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்களப் படையினர் சிதறி ஓடினர்.

நேற்று அதிகாலை 12. 55 மணிக்கு விடுதலைப் புலிகள் இத துணிகரத் தாககுதலைத் தொடுத்தனர். ஒன்றரை மைல் நீளமான தொடர் காவலரண்கள் மீதும்,அதன் இடையில் அமைந்திருந்த இரு மினி முகாம்கள் மீதும் இத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. சுமார் இரண்டு மணி நேரமாக நடைபெற்ற உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து இக் காவலரண்களில் இருந்து இராணுவத்தினர் தமது இறந்த சகாக்களின் சடலங்களையும் விட்டு விட்டு ஓட்டமெடுத்தனர்.

இதுவரை தொடர் காவலரண்கள் மீதும், மினி முகாம்கள் மீதும் ஒன்றாக நடத்திய மிகப் பெரிய தாக்குதலும், அதிக எண்ணிக்கையில் காவலரண்கள் தகர்க்கப்பட்டதும் இத் தாக்குதலிலேயே ஆகும்.

## லெப். கேணல் சுபன் உட்பட அறு வேங்கைகள் வீரச்சாவு

லெப். கேணல் சுபன்



## லெப். கேணல் சுபனின் புகழுடல் இன்று அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

பூநகரி முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய வெற்றிகரத் தாக்குதலில் வீரகாவியம் படைத்து வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் சுபனின் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது

லெப்டினன்ட் கேணல் சுபனின் புகழுடல் காலை 11-00 மணி முதல் 11-30 வரை நல்லூர் பங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு தட்டாதெருச் சந்தி, மானிப்பாய்ச் சந்தி, சண்டிலிப்பாய்ச் சந்தி, சங்கானைச் சந்தை, தொட்டிலடி, கந்தரோடை சுன்னாகம், மருதனாமடம், உரும்பராய் கோப்பாய், நீர்வேலி, ஆவரங்கால், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, கடற்கரை வீதியூடாகப் பருத்தித்துறைச் சந்திக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மாலிச்சந்திசின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் (5 ஆம் பக்கம் பார்கக)

## பூநகரி பகுதியில் மும்முனைத் தாக்குதல்கள்

[யாழ்ப்பாணம்]

பள்ளிக்குடா, கறுக்காய்த் தீவு, நல்லூர், ஆகிய பகுதிகள் மீதும் அதனை அண்டியுள்ள பகுதிகள் மீதும் சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து மும்முனைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன

நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று காலை வரை தொடர்ச்சியாக இத் ... நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும், கலிபர் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் தொடர்ச்சியாக நடாத்தினர். அத்துடன் குடாக்கடலில் இருந்து சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டவண்ணமிருந்தனர். இரவையும் பகலாக்கும்

அதிகாலை 12. 55 இற்கு ஆரம்பித்து சுமார் இரண்டு மணித்தியாலங்கள்வரை இடம்பெற்ற உக்கிர மோதலின் போது இரண்டு மினிமுகாம்களையும், 62 காவலரண்களையும் புலிகள் தாக்கி அழித்தனர். இம் மோதலில் குறைந்தது 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் படுகாயமடைந்தனர். விடுதலைப் புலிகளின் இத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்களப் படையினர் சிதறி ஓடினர்.

நேற்று அதிகாலை 12. 55 மணிக்கு விடுதலைப் புலிகள் இத துணிகரத் தாககுதலைத் தொடுத்தனர். ஒன்றரை மைல் நீளமான தொடர் காவலரண்கள் மீதும், அதன் இடையில் அமைந்திருந்த இரு மினி முகாம்கள் மீதும் இத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. சுமார் இரண்டு மணி நேரமாக நடைபெற்ற உக்கிர தாக்குதலைத் தொடர்ந்து இக் காவலரண்களில் இருந்து இராணுவத்தினர் தமது இறந்த சகாக்களின் சடலங்களையும் விட்டு விட்டு ஓட்டமெடுத்தனர்.

இதுவரை தொடர் காவலரண்கள் மீதும், மினி முகாம்கள் மீதும் ஒன்றாக நடத்திய மிகப் பெரிய தாக்குதலும், அதிக எண்ணிக்கையில் காவலரண்கள் தகர்க்கப்பட்டதும் இத் தாக்குதலிலேயே ஆகும்.

# லெப். கேணல் சுபன் உட்பட ஆறு வேங்கைகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

பள்ளிசகுடாவில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம் மீது நேற்றுஅதிகாலை விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின் போது மன்னார் மாவட்ட விசேட தளபதி லெப். கேணல் சுபன் உட்பட ஆறு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் சுபன் (வினாசித்தம்பி சுந்தரலிங்கம், கள்ளியடி, இலுப்பைக்கடவை மன்னார்), லெப்டினன்ட் தமிழேஸ்வரன் (கார்த்திகேசு யோகேஸ்வரன் துன்னாலை தெற்கு கரவெட்டி), லெப்டினன்ட் அறிவுடையான் (செல்லையா உதயகுமார் பல்லவராஜன் கட்டு முழங்காவில், பூநகரி), 2-ம் லெப்டினன்ட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# அள்ளப்பட்ட ஆயுதங்கள்

பூநகரி - பள்ளிக்குடா தொடர்காவலரண்கள் மீது நேறறு அதிகாலை நடாத்தப்பட்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் அள்ளப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள்வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| ★ 60 எம். எம். மோட்டார் | — 02 | ★ புகைக்குண்டு | — 07 |
| ★ 60 எம். எம். ஷெல் | — 56 | ★ கிளைமோர் சிறியது | — 03 |
| ★ 60 எம். எம். ஷெல் பூஸ்டர் | — 90 | ★ வெடிக்க வைக்கும் கருவி | — 03 |
| ★ ஆர். பி. ஜி. | — 02 | ★ ஐ.எம்.ரவைகள் | — 11,740 |
| ★ ஆர். பி. ஜி. ஷெல் | — 11 | ★ ஐ.எம். ரவை லிங்குகள் | — 1803 |
| ★ ஆர். பி. ஜி. புறப்ளர் | — 11 | ★ ஐ எம். காஸ் ரவைகள் | — 20 |
| ★ ஏ. கே. எல். எம் ஜி. | — 03 | ★ நேட்டோ ரவைகள் | — 408 |
| ★ மகசின்கள் | — 03 | ★ லிங்குகளுடன் ரவைகள் | — 192 |
| ★ ஆர் பி. ஜி கோல்சர் | — 01 | ★ 5 56 ரவைகள் | — 274 |
| ★ ரி - 56 - 2 ரக றைபிள்கள் | — 05 | ★ ரி - 81 துப்பாக்கி பைனட் | — 03 |
| ★ அதற்குரிய மகசின்கள் | — 65 | ★ இராணுவ பெல்ட் | — 27 |
| ★ ரி - 81-1 ரக றைபிள்கள் | — 05 | ★ கெல்மட் | — 34 |
| ★ அதற்குரிய மகசின்கள் | — 31 | ★ தண்ணீர்க் கான் | — 38 |
| ★ ரி - 56 புதுமொடல் றைபிள் | — 03 | ★ தண்ணீர்க்கான் கோல்சர் | — 136 |
| ★ ரி - 56 பட்மொடல் | — 01 | ★ கிற்பாக் | — 41 |
| ★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி | — 04 | ★ ஆர் பி.ஜி. கோல்சர் | — 01 |
| ★ 40 மி மீ பிஸ்டல் ரக துப்பாக்கி | — 01 | ★ ஏ. கே. கோல்சர் | — 21 |
| ★ 40 மி. மீ ஷெல் | — 08 | ★ சாப்பாட்டுப்பெட்டி | — 21 |
| ★ ஜி - 3. ஏ. 3 ரக துப்பாக்கி | — 01 | ★ சப்போட் கோல்சர் | — 28 |
| ★ அதற்குரிய மகசின் | — 11 | ★ றெயின் கோட் | — 34 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | — 01 | ★ மில்ரறி சப்பாத்து | — 90 சோடி |
| ★ அதற்குரிய பற்றறி | — 01 | ★ சிவில் சப்பாத்து | — 100 சோடி |
| ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு | — 23 | | |

# விடியும்வரை 3 ஹெலிகள் இறந்தவரை அள்ளிச்சென்றன

நேற்று அதிகாலை 12-55 மணியளவில் பூநகரி பள்ளிக்குடா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாககுதலில் காயமடைந்த இராணுவத்தினரையும் கொல்லப்பட்ட ராணுவத்தினரையும் ஏற்றிக் கொண்டு பல தடவைகள் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள் பலாலி விமானத்தளத்திற்கு சென்றன.

நேற்று காலைவரை ஹெலிகொப்டர் பள்ளிக்குடாவிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கு சென்றன என்றும்

(5 ஆம் பக்கம் பார்க்க)



மன்னார்மாவட்டத்தின்விசேட தளபதியாகஆனி1989ல் சுபன் பொறுப்பேற்றுக் கொண்டார். அதற்கு முன் மன்னார் மாவட்ட தளபதியாக விக்டர் ஒஸ்கா பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே பல தாக்குதல்களில் பங்கு கொண்ட சுபன் அவர்கள் சிலாபத்துறை முகாம் தகர்ப்பு தாக்குதலிலும், மன்னார் பழைய பாலத்தில் நடைபெற்ற தாக்குதலிலும், கஜூவர்த்த இராணுவமுகாம் தகர்த்த தாக்குதலிலும், நானாட்டான்- வங்காலை வீதியில் ரோந்துப்படையணிமீது நடத்தப்பட்ட தாக்குதலிலும், கொக்குப்படையான் இராணுவ முகாம் மீதான தாக்குதலிலும், ஆனையிறவு இராணுவமுகாம் மீதான ஆகாய கடல் வெளித் தாக்குதலிலும் சிறப்பு பங்கு வகித்தவர் ஆவார்.

கேணல் சுபனின் புகழுடல் இன்று மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது

லெப்டினன்ட் கேணல் சுபனின் புகழுடல் காலை 11-00 மணி முதல் 11-30 வரை நல்லூர் பங்கையற்சரசி மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்கு கோப்பாய், நீர்வேலி, ஆவரங்கால், அச்சுவேலி, வல்வெட்டித்துறை, கடற்கரை வீதியூடாகப் பருத்தித்துறைச் சந்திக்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மாலிச்சந்திசின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில்

(5ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி பகுதியில் மும்முனைத் தாக்குதல்கள்

[யாழ்ப்பாணம்]

பள்ளிக்குடா, கறுக்காய்த்தீவு, நல்லூர், ஆகிய பகுதிகள் மீதும் அதனை அண்டியுள்ள பகுதிகள் மீதும் சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து மும்முனைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன

நேற்று முன்தினம் நள்ளிரவில் இருந்து நேற்று காலை வரை தொடர்ச்சியாக இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. பூநகரி, ஆனையிறவு. கல்முனை ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்படி பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களையும், கலிபர் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் தொடர்ச்சியாக நடாத்தினர். அத்துடன் குடாக்கடலில் இருந்து சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டவண்ணமிருந்தனர். இரவையும் பகலாக்கும் வகையில் பராவெளிச்சம் பிரயோகிக்கப்பட்டது.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

# சிறிலங்கா ராணுவத்தளபதி பூநகரி விரைவு

(கொழும்பு)

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய பூநகரி இராணுவ முகாமிற்கு நேற்று சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்திய ரட்ணாவும் மற்றும் சில இராணுவ அதிகாரிகளும் சென்றனர் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ முகாமிற்கு ஏற்பட்ட சேதத்தை பார்வையிடுவதே இவரது வருகையின் நோக்கம் எனத் தெரிய வருகிறது.

# இன்று திலீபன் நினைவு நாள் தமிழீழம் எங்கும் எழுச்சிமயம்

(யாழ்ப்பாணம்)

தாயக விடுதலைப் போராட்டத்தில் தியாக மரணமடைந்த லெப் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களின் இறுதிநாளான இன்று தமிழீழம் எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது.

தியாகி திலீபன் தியாக மரணமடைந்த இன்றைய தினம் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் தாயக விடுதலையை நோக்கிய மக்களின் எழிச்சியை வெளிக்காட்டவும் இன்று எழிச்சிநாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்றைய எழுச்சி நாளுக்காக தமிழீழம் எங்கும் எழுச்சிக் கோலம் பூண்டிருக்கிறது. தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகள், நகரங்கள் பொது இடங்கள் ஆகிய பகுதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. வீதிகளின் குறுக்காக திலீபனின் தீர்க்க தரிசனம் மிக்க எழிச்சியூட்டும் கோசங்களைத் தாங்கிய பெரியளவிலான பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள நகரங்கள் கிராமங்கள் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரச, தனியார் அலுவலகங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் மற்றும் மக்கள் கூடும் அனைத்துப் பகுதிகளில் எல்லாம் விசேடமாக அமைக்கப்பட்ட திலீபனின் நினைவுப் பந்தல்களில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மலர்மாலைகள் அணிவித்தும் மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது

நேற்றைய தினம் தியாகி திலீபனின் உருவப்படத்தைத் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் யாழ். நகரப்பகுதிகளி

(5 ஆம் பக்கம் பார்க்க )

# குடாநாட்டில் கோட்டரீதியாக திலீபன் நினைவுக் கூட்டங்கள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 5 ஆவது ஆண்டு நினைவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று யாழ். மாவட்டத்தில் வலிகமாம், வடமராட்சி தென்மராட்சி கோட்டங்களில் மிகவும் எழுச்சி பூர்வமாக நடைபெறவுள்ளது.

**வலிகாமம் கோட்டம்:**

தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்த நல்லூர் கந்த சுவாமி ஆலயமுன்றலில் இன்று காலை 7 00 மணிக்கு தியாகி திலீபனின் தந்தையார் திரு நா இராசையா அவர்கள் ஈகைச் சுடரேற்றி இறுதி நாள் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து வலிகாமம் தளபதி திரு. இளங்குமரன் தேசியக் கொடியை ஏற்றுவார் காலை 8.00 மணிக்கு தீவக தளபதி திரு. செழியன் உண்ணா நோன்பை ஆரம்பித்து வைப்பார். இதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் கவிதா நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. காலை 10 48 இற்கு தியாகி திலீபன் தியாக மரணமடைந்த நேரம் மௌன அஞ்சலி செலுத்தி உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்படும்.

மாலை நான்கு மணிக்கு

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

**OLIVETTI TYPE WRITER**

நல்ல நிலையில் விற்பனைக் குண்டு. டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி,(வான வில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (3208)

**நீம் சுகாதார தூபம்**

இரவில் ஆழ்ந்த உறக்கம், மலர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தருகிறது ''நீம் சுகாதார தூபம்'' படுக்கை அறையில் புகைத்து, நுளம்புத் தொல்லையின்றி நிம்மதியாக நித்திரை செய்யுங்கள். சுக வாழ்வு உங்களதே. -'மில்க் வைற்'' (சி/5102)

**your watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.

(Opposite old Vihare)

(சி-5044

**மீண்டும் கிடைக்கிறது**

''கோப்பாய் - சிவம்'' எழுதிய ''சைவாலயக் கிரியைகள்'' புதிய பதிப்பு வெளிவந்து விட்டது எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். முன்பு கிடைக்காமல் தேடியவர்கள் உடனே வாங்கிக் கொள்ளுங்கள். சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. (3200)

**உடன் விற்பனைக்கு உண்டு**

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிபபாய். (3272)

**மனைப் பொருளியல் வகுப்புகள்**

1993—94ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க. பொ. த. (உயர் தர) பரீட்சைக்கான மனைப் பொருளியல் வகுப்புகள் நடைபெறுகின்றன தொடர்பு முகவரி;- 88, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (3278)



யாழ்ப்பாண

## மாநகராட்சி மன்றம்

### தற்காலிக குடும்பநல உத்தியோகத்தர்கள் (மருத்துவ மாதர்கள்)

### பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபை தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் குடும்பநல உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள் :**

மருத்துவ மாதுவாகப் பதிவு செய்தவராகவும், சுகாதாரசேவைப்பணிப்பாளரால் வழங்கப்பட்ட தகைமைச் சான்றிதழ்களைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்

அரச சேவையிலிருந்து இளைப்பாறிய அனுபவம் மிக்க உத்தியோகத்தர்கள் விரும்பத் தக்கது.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடன் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும் 03-10-92ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூரிலுள்ள மாநகரசபை அலுவலகத்தில் சமுகமளிக்கவும்.

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
23-09-92.

(சி/5115)


## 90-ம் நாள் நினைவலைகள்



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 22 — 03 — 1971 | 27 — 06 — 1992 |

### லெப். சிலம்பரசன் (றம்போ)

(பரமானந்தன் தயாளன்)

இந்த மண் மீட்கும் போரில் இன்னுயிர்
தந்த எங்களின் குலக் கொழுந்து
லெப்டினன்ட் சிலம்பரசன் எனும் உன்பெயரை
எப்படித்தான் மறப்போம் - இப்பிறப்பில் நாமும்

- குடும்பத்தினர்

97, தெய்வேந்திரராசா வீதி,
வட்டக்கச்சி. (3147)

## யானைதாக்கி பொலிஸ் பலி

வென்னப்புவையிலுள்ள கஹதவில என்றகிராமத்தைக் கலக்கிய இரு காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த முயன்ற பொலிஸ்காரரர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு பொலிசார் படுகாயமடைந்ததாக வென்னப்புவ பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிறு நடைபெற்ற மேற்படிசம்பவத்தைத் தொடர்ந்து வனவிலங்கு இலாகா அதிகாரி தனது சகாக்களுடன் ஸ்தலத்திற்கு சென்று ஒரு யானையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.



### உழைப்போம் இலட்சியத்தில் வெல்ல

பன்னிரு தினங்கள் - நீ
படுத்திருந்தாய் ஆனால்
புயலொன்று புறப்பட்டதே.

நல்லூரின் வீதியிலே
மையம் கொண்ட காற்றழுத்தம்
தமிழீழத் திசையெங்கும்
சூறாவளியாய் சுழன்றடித்ததே.

காந்திய நாடு
வெளிவேடம் களைந்து
அம்பலத்தில் நிர்வாணமாகியது
அறப் போரின் சத்திய வீச்சால்

உன் கனவுகள்
விழி மடல் திறக்க மறைபவையல்ல
முழு வீச்சில் நனவாகும்
உழைப்போம் அதற்காக நாளும்

**JANASWEETS**
**CHANTHIRA GROUND NUT ALVA**

### நியூ சந்திரா தொழிலகம்

209/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5108)

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 26

1987-ஆம் ஆண்டு இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து யாழ். நல்லூர் ஆலய வீதியில் நீராகாரமும் அருந்தாது உண்ணாவிரதமிருந்து பன்னிரண்டாம் நாளான இதே தினத்தில் ஈகச்சாவெய்திய- யாழ்-மாவட்ட அரசியற்பிரிவுப் பொறுப்பாளர்-

**லெப். கேணல் திலீபன்** (இராசையா பார்த்திபன்- ஊரெழு மேற்கு, சுன்னாகம்-யாழ்ப்பாணம்)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**அமலதாஸ்** (நாகமுத்து மகேஸ்வரன் - செம்மலை; அளம்பில் - மணலாறு)

1988-ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வைத்தி** (செந்திவேல் தேசிங்கராஜா - வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி, யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை - சலப்பையாற்றுப்பகுதியில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**மேஜர் சுரேந்திரன்** (காளிராசா சிறிபாஸ்கரன்- மூருகாபுரி, உப்புவெளி - திருக்கோணமலை)

1990-ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கேதீஸ்** (பாலகிருஸ்ணன் சந்திரகாந்தன் - மாயனூர், வட்டக்கச்சி, கிளிநொச்சி)

யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். சிசிலியா** (யூடினா பகீரதகுமார்-மருத்துவமனை வீதி-மன்னார்)

**லெப். நகுலன்|நேசன்** (இராசதுரை சிவனேசராசா - வத்திராயன் வடக்கு, தாளையடி-யாழ்)

**ரகு** (இராசலிங்கம் றொபெட் சாந்தகுமார்-கட்டுடை) மானிப்பாய்-யாழ்

அம்பாறை-வினாயகபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக்கொல்லப்பட்டு பின்னர், தமிழீழக்கடலோரம் சடலங்களாகக் கரையொதுங்கிய 3-தமிழர்கள்.

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 2-தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5105)

குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிப்பாய். (3272)

### மனைப் பொருளியல் வகுப்புகள்

1993—94ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க. பொ. த. (உயர் தர) பரீட்சைக்கான மனைப் பொருளியல் வகுப்புகள் நடைபெறுகின்றன தொடர்பு முகவரி;- 88, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (3278)



1971 1992

## லெப். சிலம்பரசன் (றம்போ)

(பரமானந்தன் தயாளன்)

இந்த மண் மீட்கும் போரில் இன்னுயிர்
தந்த எங்களின் குலக் கொழுந்து
லெப்டினன்ட் சிலம்பரசன் எனும் உன்பெயரை
எப்படித்தான் மறப்போம் - இப்பிறப்பில் நாமும்

- குடும்பத்தினர்

97, தெய்வேந்திரராசா வீதி,
வட்டக்கச்சி. (3147)

விழி மடல் திறக்க மறைபவையல்ல
முழு வீச்சில் நனவாகும்
உழைப்போம் அதற்காக நாளும்

JANASWEETS
CHANTHIRA GROUND NUT ALVA

## நியூ சந்திரா தொழிலகம்

209/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/5108)

ழிழக்கடலோரம் ... 3-தமிழர்கள்.

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 2-தமிழ் இளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி/5105)

# தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி

**துப்பாக்கி ஏந்துவதும் துணிந்து களம் சென்றே
தப்பாமல் போரிட்டே சாவதும் வீரமேனும்
நீருமருந்தாமல் நெஞ்சுறுதி மாற்றாமல்
சோர்வு மடையாமல் சொல்லும் தளராமல்
பாருமதிசயிக்க பார்ப்போர் உளம் நெகிழ
உயிரை விடுவதென்ப துண்மையிலே வீரமையா!**



## வடமாகாண

## அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்

இல. 3, சம்பியன் வீதி, கொக்குவில். (சி/5112)

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
26 - 9 - 1992
யாழ்ப்பாணம்

## திலீபனென்ற தியாக மலர்ச் சோலை

ஊரெழுவில் பிறந்துவந்த உயர்ந்த ஞானம் - தமிழர்
உரிமைக்காய்த் தனையெரித்து ஒளிர்ந்ததீபம்!
சீரொழுகும் பண்புநலம் கொண்டசீலன் - எங்கள்
சிந்தையிலே நிறைந்துறையும் அன்புத் தோழன்!

புலிப்படையாய்க் களம்புகுந்த புரட்சிவீரன் - பெரும்
புயலாகி எதிரிகளைத் தொலைத்த தீரன்!
சிலிர்த்துவரும் சிங்களத்தைக் கலைத்த சிங்கம் - உயர்
செந்தமிழர் வரலாற்றில் நிலைத்த குன்றம்!

பேச்சோடு செயலாக்கப் பெருமையுள்ள நம்பி - அவன்
பிரிவாலே நாமழுதோம் உள்ளமெல்லாம் வெம்பி!
மூச்சினையும் தமிழீழ மண்ணுக்காய் விடுத்தான் - பெரு
மூச்செறிந்து முழுவுலகும் கண்கலங்கப் படுத்தான்!

உட லுறுப்பு இன்றி உயிர்வாழ்ந்திடலாம் என்றான் - மண்ணில்
ஓரினமும் நாடின்றி வாழ்வதரி தென்றான்!
குடலில் ஒருமுழமளவு திலீபனன்று இழந்தான் - மாற்றான்
குண்டுடலைத் துளைத்தாலும் குன்றாது வளர்ந்தான்.

யாழ்ப்பாணக் கோட்டையிலே புலிக்கொடி நின்றாடும் - அந்த
நன்னாளே! பொன்னாளாம் என்றுரைத்தான் பாரும்!
பாழ்பட்ட தமிழ்ச்சாதி தலைநிமிரும் காலம் - தமிழ்ப்
பண்பாடும் கவின்கலையும் கண்டுய்யும் ஞாலம்!

அறுபத்து மூன்றாவ தாண்டினிலே பிறந்தான் - தாயை
ஐயிரண்டு மாதத்துள் பாலனவன் இழந்தான்!
பொறுப்புள்ள தந்தையிடம் பொற்கிளிபோல் வளர்ந்தான் - தாயைப்
போலெண்ணித் தமிழீழத் தாயகத்தைத் துதித்தான்!

பல்கலைக் கழகம்வரை படித்துயர வாய்ப்பு பெற்றான்-நல்ல
பதவியினை நாடாது களம்புகுந்து கொண்டான்!
அல்லு பகல்பாராது அயராது உழைத்தான் - ஈழ
அன்னையவள் பாதத்தில் இன்னுயிரை விடுத்தான்!

ஒருசொட்டு நீர்கூட அவனருந்தவில்லை! - உடலில்
ஓடிநின்ற குருதிவற்றிக் காய்ந்ததுதான் உண்மை!
திருவோடு வாழ்கின்ற சிறுவயதுக் காளை - ஒளித்
தீபமென எரிந்தணைந்தான் தியாகமலர்ச் சோலை!

''ராஜீவும் ஜே ஆரும்'' ஒப்பந்தம் செய்தார் - அமைதி
ராகத்தை இசைத்தபடி தீப்பந்தம் எய்தார்!
பாசமென வந்தவர்கள் வேசமதைக் கலைத்தார் - கொடும்
பாசிசத்தை தமிழீழ தேசத்துள் விதைத்தார்!

களங்கண்ட மறப்புலியோ காந்திவழி நின்றான் - அந்தக்
காந்திபெயர் கொண்டவரோ கண்மூடிச் சென்றார்!
இளந்தமிழன் உண்ணாத நோன்பினிலே எரிந்தான் - பார்த்து
இருந்திருந்து இறந்தபின்னர் அநுதாபம் புரிந்தார்!

துள்ளிவிளை யாடியவன் துடிப்படங்கிப் படுத்தான் - மிகத்
துடிதுடித்து அணுவணுவாய்த் தன்னுயிரை விடுத்தான்!
பிள்ளையவன் பஞ்சுடலம் சருகாகிப் போச்சு - கண்ணீர்ப்
பெருவெள்ளம் ஈழமெங்கும் கரைகடக்கலாச்சு!

வெள்ளைக் கொடியோடு வீதிவலம் வந்தோர் - உண்மை
வேடம் சிவப்பென்று எமக்குரைத்து நின்றார்!
குள்ள நரிக்கூட்டம் தனைமக்க ளுணர்ந்தார் - அவர்
கொடுமைக் குணங்கண்டு நெஞ்சம் வெகுண்டார்!

மாற்றானின் துணையாலே மலராது ஈழம் - நாம்
மனமொன்று படெழுந்தால்! செல்லாது காலம்!
காற்றோடு கலந்திட்ட திலீபனின் ஆவி - சொன்ன
கதைகேட்க மறுத்தாலோ நாமெல்லாம் பாவி!

திசையெட்டும் முழங்குதுபார் திலீபனது நாமம் - அவன்
திருவார்த்தை நம்வாழ்வில் ஒளியூட்டும் வேதம்!
விசைகொள்ள வேண்டுமடா தமிழீழ மக்கள் - நாளை
விடிவுண்டு! நம்வாழ்வில் முடிந்துவிடும் சிக்கல்!

## கேள்வி அறிவித்தல்

## கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்

### யாழ்ப்பாணப் பிரதேச கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான தளபாடங்கள் விவசாயக்கருவிகளை வழங்கல்

யாழ். கல்வித் திணைக்களத்திற்கும் அதன் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகட்கும் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள தளபாடங்கள், விவசாயக் கருவிகள் முதலியவற்றை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரை இடப்பட்ட கேள்விகள் தளபாட உற்பத்தியாளர்களிடமிருந்தும் விநியோகஸ்தர்களிடம் இருந்தும் 14. 10. 1992 ஆம் திகதி காலை 10 00 மணி வரை யாழ். கல்வித்திணைக்கள கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்விகள் இத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்தில் இணைப்பிரதிகள் தயாரிக்கப்பட்டு இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் கேள்வி முடிவு நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் ''அலுவலகத் தளபாடங்களும், விவசாயக் கருவிகளும் வழங்குவதற்கான கேள்விகள்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும் கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும். அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதி நிதிகள் சமுகமளிக்கலாம்.

03. கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப் படம் ஆகியவற்றினை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா. 100/- மீளளிக்கத் தக்க வைப்புப் பணமாக ரூபா. 250/- ஆக மொத்தமாக ரூபா. 350/- இனை இவ்வலுவலகத்தில் செலுத்திப் பெற்ற உரிய பற்றுச்சீட்டினை (பொது 172) 12 10 1992ஆம் திகதி காலை 10. 00 மணிக்கு முன்னர் சமர்ப்பித்து எமது திணைக்கள கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

### தேவையான தளபாடங்கள் விவசாயக் கருவிகள்

**அ**

1. கண்ணாடி பொருத்தப்பட்ட முன் முகப்புக்களைக் கொண்ட உருக்கு அலுமாரி.
2. ஆசிரியர் மேசை
3. தட்டெழுத்தாளர் மேசை
4. தட்டெழுத்தாளர் கதிரை
5. மகாநாட்டறை மேசை
6. மகாநாட்டறைக் கதிரை
7. உருக்கு அலுமாரி (சிறியது)
8. புத்தக ராக்கை (உருக்கு)
9. சாதாரண மேசை (உருக்கு)
10. சாதாரண கதிரை (உருக்கு)
11. கட்டில் 6'X3'

**ஆ**

12. கைக்கத்தி 6'' - 7''
13. கைக்கத்தி 4'' - 5''
14. பேனாக்கத்தி 3''
15. அரும்பு ஒட்டும் கத்தி
16. பூவாளி 1 1/2 கலன்
17. மண்வெட்டி 6'' X 6''
18. அலவாங்கு 48'' X 7/8''
19. ஜீ ஐ வாளி - 10''
20. சட்டிட வேலைக்கான தாச்சி-14 1/2''
21. ஜீ ஐ வாளி - 14''

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1992 9. 24.

ஆர். சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.
(சி/5110)

## 'திலீபன்' பன்னிரண்டாம் நாள் (26. 09. 92)

காலைமலர் பூக்க மறந்த வேளையிலே...
சோலைக் கிளியொன்று சொல்லற்று வீழ்ந்ததோ?
நாளை விடியும் தமிழீழ நாட்டிற்காய்...
கோல நிலவின்று குழிக்குள்ளே போனதோ?

ஈசன் வாழும் சன்னிதியில் .. எங்கள்
நேசன் எமைவிட்டு மறைந்தானோ?
பாசம் பொழியும் மக்களை விட்டெம்
பாவலன் என்னும் பார்த்திபன் மறைந்தானோ?

கொல்லும் இந்தியப் படையாலே... எங்கள்
வல்லவன் திலீபன் வானில் மறைந்தானோ?
நெல்லின் மணிபோல் நிறைந்திடும் மக்கள் முன்
நாயகன் பயணம்... நிறைவுற்றுப் போனதோ?

ஈகச் சுடரொன்று .. எரிந்தொளி தந்தநாளில்
யாகத்தை நாமினித் தொடங்கிடுவோம்!- புது
வேகத்துடன் ஒன்று சேர்ந்திடுவோம் - எங்கள்
சோகத்தை வென்றிடப் போரிடுவோம்!

கவிஞர். மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## திலீபன் நினைவில்

## கோவிலில்லா இறைவன் நீ

எத்திசை மேவினும் பார்த்திபன் நாமம் இதய
சுத்தியோ டெங்குமே பேணிடக் கண்டோம்
சத்தமில்லா தவன்செத் ததனால் தமிழ்த்தேசமே
நித்திய கீதமாய் திலீபனைப் பாடுது.


செத்து மடிந்திட வேண்டு மென்றெண்ணிய
சித்தமிலாத சிறுமைகொள் இந்திய
வித்தைகள் செத்திட வேதமாய் ஆனவன்
இத்தரையெங்கு மேகீதமாய்க் கேட்கிறான்.

திக்குகள் தோறும் எரிமலையானது வேழ
மொக்குகள் வீழ்ந்தன கோட்டை அழிந்தது
அக்குவேறான தரசுப் பெரும்படை திலீபனோ
சத்திய தேசத்தின் தீபமென்றா கினான்.

ஆலைகள், சாலை, பள்ளி அனைத்திலும் மேலாய் இங்கு
கோலமார் மக்கள் இதய பீடங்கள் தம்மிலெல்லாம்
சீலமாய் படர்ந்த தாலே சிகரமென்றாகி இன்று
கோவிலே இல்லா நெஞ்சத் திறையென ஆனாய் நீ

– வளவை வளவன்

## தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவில் நனைவோம்



## ஓ...திலீபனே

ஆயிரத்து தொளாயிரத்து
எண்பத்தேழு
செப்டெம்பர் இருபத்தாறு
எங்கள்தேசம்
ஒரு சூரியனை
இழந்தது
தியாகம்
தனக்குத் திலீபனெனப் பெயர்
சூடிக் கொண்டது
எங்கள் தேசத்தின்
தெருக்களில்
போர்ப்பரணி
பாடித் திரிந்த
புரட்சிக் குயிலொன்று
அகிம்சையால்
தன்னை
அழித்துக் கொண்டது
குண்டுகள் பட்டும்
குடல் அறுத்தும்
குலையாத
எங்கள்
திலீபனை
பசி பாடையில்
ஏற்றியது
கடலலையாய்ப்
பொங்கியெழும்
எங்கள்
திலீபன்
தன் கடமை
முடிந்த தென்று
கண் மூடிக்கிடக்கின் றான்
அனல் தெறிக்கும்
வார்த்தைகளை
அள்ளி வீசும்
எங்கள்
திலீபன்
என் பேச்சு
முடிந்ததென்று
வாய் மூடிக்கிடக்கின்றான்
ஓ..
திலீபனே
நீ மெளனமாய்
மரணித்து விட்டாய்
எங்கள்
நெஞ்சங்களில்
புயலை
மையப்படுத்தி விட்டு
மருத்துவ பீடத்தின்
மருத்துக்கலவைகளுக்குள்
மெளனத்தில்
இருக்கும்
எங்கள்
திலீபனே
நீ
காட்டிய பாதையில்
எங்கள்
படையணி
நகர்ந்து
கொண்டிருக்கிறது
நீ
சுவாசிக்க
விரும்பிய
சுதந்திரக்
காற்றை
நாங்கள்
சுவாசிப்போம்.

-சு. சுரேஸ்குமார்

அந்தக்
காந்திபெயர் கொண்டவரோ கண்மூடிச் சென்றார்!
இளந்தமிழன் உண்ணாத நோன்பினிலே எரிந்தான் -
பார்த்து
இருந்திருந்து இறந்தபின்னர் அநுதாபம் புரிந்தார்!
துள்ளிவிளை யாடியவன் துடிப்படங்கிப் படுத்தான் -
மிகத்
துடிதுடித்து அணுவணுவாய்த் தன்னுயிரை விடுத்தான்!
பிள்ளையவன் பஞ்சுடலம் சருகாகிப் போச்சு -
கண்ணீர்ப்
பெருவெள்ளம் ஈழமெங்கும் கரைகடக்கலாச்சு!
வெள்ளைக் கொடியோடு வீதிவலம் வந்தோர் -
உண்மை
வேடம் சிவப்பென்று எமக்குரைத்து நின்றார்!
குள்ள நரிக்கூட்டம் தனைமக்க ளுணர்ந்தார் - அவர்
கொடுமைக் குணங்கண்டு நெஞ்சம் வெகுண்டார்!

மாற்றானின் துணையாலே மலராது ஈழம் - நாம்
மனமொன்று படஎழுந்தால்! செல்லாது காலம்!
காற்றோடு கலந்திட்ட திலீபனின் ஆவி - சொன்ன
கதைகேட்க மறுத்தாலோ நாமெல்லாம் பாவி!

திசையெட்டும் முழங்குதுபார் திலீபனது நாமம் - அவன்
திருவார்த்தை நம்வாழ்வில் ஒளியூட்டும் வேதம்!
விசைகொள்ள வேண்டுமடா தமிழீழ மக்கள் - நாளை
விடிவுண்டு! நம்வாழ்வில் முடிந்துவிடும் சிக்கல்!

தியாகத்தின் எல்லையடா! திலீபனெங்கள் செல்வம்! -
ஈழ
தேசமெங்கும் மணக்கின்ற புதுவாச முல்லை!
வியாபித்து நிற்கின்றான் நெஞ்சமெலாம் விரிந்து -
அந்த
விண்ணொளியை அஞ்சலிப்போம் இதயப் பூச்சொரிந்து

- நிலா தமிழின்தாசன்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு
04-04-1974
வீரச்சாவு
26-09-1990

## வீரவேங்கை - ரகு
[இராஜசிங்கம் றொபேட் சாந்தகுமார்]

"கோட்டையைப் பிடி
ஏற்று செங்கொடி - கூறி
நோன்பிருந்தான்
பெருந்தீப் புலி
ஏற்றிதை செங்கொடி
ஏற்றம் போரினில்
எதிரி ஓட மார்பினில்
ஏந்தினாய் நீ வெடி

கோட்டையை இராணுவம் கோட்டை விட்டது-உன்
குருதியில் தோய்ந்த மணிக்கொடி பறக்குது"

இவர் 26-09-90 அன்று கோட்டையில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்தார் இவருடன் வீரச்சாவு எய்திய லெப் நகுலன், 2-வது லெப் சிசிலியா ஆகியோருக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்
- நண்பர்கள்

கட்டுடை - மானிப்பாய். (3276)

2. ஆசிரியர் மேசை
3. தட்டெழுத்தாளர் மேசை
4. தட்டெழுத்தாளர் கதிரை
5. மகாநாட்டறை மேசை
6 மகாநாட்டறைக் கதிரை
7. உருக்கு அலுமாரி (சிறியது)
8. புத்தக ராக்கை (உருக்கு)
9. சாதாரண மேசை (உருக்கு)
10. சாதாரண கதிரை (உருக்கு)
11. கட்டில் 6'X3'

(2–11: அ)

12. கைக்கத்தி 6'' - 7''
13. கைக்கத்தி 4'' - 5''
14. பேனாக்கத்தி 3''
15. அரும்பு ஒட்டும் கத்தி
16. பூவாளி 1 1/2 கலன்
17. மண்வெட்டி 6'' X 6''
18. அலவாங்கு 48'' X 7/8''
19. ஜீ ஐ வாளி - 10''
20. சட்டிட வேலைக்கான தாச்சி-14 1/2''
21. ஜீ ஐ வாளி - 14''

(12–21: ஆ)

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1992 9. 24.

ஆர். சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.
(சி/5110)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
18·09·1971



தாயக விடிவில்
05·09·1991

## லெப். மதுரா [பரமு வடிவாம்பாள்]
(மணலாற்றுப் போரில் வீரச்சாவு)

ஓ எங்கள் மதுரா
மதுரத் தமிழ் காக்க
மானமுடன் போராடும்
அணியில் இணைந்து
அரக்கர் முகாம் பலதகர்த்து
இன்று -
மாவீரர் வரிசையிலே உயர்ந்திட்ட உயிரே!
பாசம் நெஞ்சில் மோத
பாவை நீ விட்ட பணி
தொடர்ந்து முடிப்பதென
உறுதியை நாமெடுக்கின்றோம்.

26-09-1992 சனிக்கிழமை (இன்று)எமது இல்லத்தில் இடம்பெறும் வருடாந்த நினைவு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவன் வீதி,
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

பெற்றோர், சகோதரர்,
நண்பர்கள்.
(சி-5118)

ஆலைகள், சாலை, பள்ளி அனைத்திலும் மேலாய்
இங்கு
கோலமார் மக்கள் இதய பீடங்கள் தம்மிலெல்லாம்
சீலமாய் படர்ந்த தாலே சிகரமென்றாகி இன்று
கோவிலே இல்லா நெஞ்சத் திறையென ஆனாய் நீ

- வளவை வளவன்

## தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவில் நனைவோம்



தன்னை உருக்கி ஒளி கொடுக்கும்
மெழுகுவர்த்தி போல- நீ
பன்னிரண்டு நாட்களும்
தமிழினத்தின் விடுதலைக்காய்
உருகி உருகி உயிரிழந்தாய்
ஐந்தாண்டுகள் உருண்டோடின
இன்றும் உன் நினைவு
தமிழீழ மண்ணில்
புயலைப் பிறப்பிக்கிறதே.

**வர்த்தகர் சங்கம்,**
**நாவற்குழி.**

(3274)

மருத்துக்கலவைகளுக்குள்
மௌனத்தில்
இருக்கும்
எங்கள்
திலீபனே
நீ
காட்டிய பாதையில்
எங்கள்
படையணி
நகர்ந்து
கொண்டிருக்கிறது
நீ
சுவாசிக்க
விரும்பிய
சுதந்திரக்
காற்றை
நாங்கள்
சுவாசிப்போம்.

-சு. சுரேஸ்குமார்

## நெஞ்சில் ஓர் தீபம்

எங்கள்
தேசப் பூங்காவின்
வசந்தத்திற்காக
உன்
உயிர் மழையை
தேசிய மயமாக்கியவனே
திலீபா
அழிந்து போனது
ஐந்தாண்டுகள்
மட்டும் தான்
ஆனால்
நீ விட்டுப் போன
ஆயிரம் ஆயிரம்
புரட்சிப் பூக்களின்
வெற்றி வாசங்களையே
உனக்கு என்றும்
காணிக்கை ஆக்குகின்றோம்
பாரத பூமி
புத்தகத்தில் இருந்து
அகிம்சை வார்த்தை
அழிந்து போனதும்
உன்னால் தான்
அவர்கள் செய்தது
சத்தியா கிரகமாம்
அது
காடும் தேடும் காலத்தில்
பாடக்கூடிய
சுகமான ராகம்
ஆனால்
நீ
நடத்தியதோ
வாலிப வயது
பட்டினியாகம்
அது உலகத்திற்கே
புதிய பாடம்
திலீபா
உன் தர்மம்
தமிழீழ சாசனத்தில்
அழிக்க முடியாத
அத்தியாயமாவது
நிச்சயிக்கப்பட்ட
நிதர்சனமாகும்
இது உறுதி.

-தேன்நிலா



# நெஞ்சைப் பிசைகின்ற நினைவுகளின் சொந்தக்காரன்!

இருப்பவர் எல்லார்க்கும்
"சோற்றுப்பசி" மட்டுமே எடுக்கிறபொழுது,
இதயம் நிறைந்த தோழனே!
உனக்கு மட்டும் எப்படிச்
"சுதந்திரப்பசி" எடுத்தது?!

குடல் துடித்துக், குறுகிச் சுருண்டாலும்;
உடல் களைத்து, உருகிச் சிதைந்தாலும்;
தீன் மறுத்தாய்! நீர் மறுத்தாய்!
"நான் புனிதன்!" எனப் பொறித்தாய்!!

உண்ண மறந்து, உறவைத் துறந்து
இருப்பவர் இங்குண்டு!
உன் போல
உன்னை மறந்து, மண்ணை நினைந்து
இறப்பவர் எங்குண்டு?!

– ஜெ.கி. ஜெயசீலன்

# ஆயிரம் காந்திகள் அணிவகுத்தாலும்......



திலீபா...
இலட்சியத்தின் வலிமையை அடையாளம் காட்ட
எமனையே விழுங்கி, ஏப்பம் விட்டவனே
'பசி' எனும் இரண்டெழுத்துக் கண்ணாடியில் பதிந்த
முத்தமிழ் ஓவியமாய் உன் முகவடிவம், என்
நெஞ்சத் திரைகளில் மிளிர்கின்றது
(திலீபா ...)

ஆயிரம் காந்திகள் அணிவகுத்து நின்றாலும்
உன் அடிச்சுவட்டில் நிழலுக்குக்கூட
அர்த்தம் சொல்லிவிட முடியாது.

திலீபா... நீ மார்கழியின் மை இருட்டில்
வந்திறங்கும் மின்னல் அல்ல ...
ஒரு கோடி விடியல்களின்
உன்னத வெளிச்சம் நீ.
(திலீபா ... நீ)

பன்னிரண்டு நாட்கள் சாவை மிஞ்சி,
சாதனை படைத்து, பட்டினியால் போர் தொடுத்த
பைந்தமிழ் ராஜாளியே,
உன் உதிர்ந்த சிறகுகள், ஒவ்வொரு நொடியும்,
உன் சாவின் குறிக்கோளைத் தொட்டு,
நீதி கேட்டு, பதிலடி கொடுக்கும்.

சிந்திய உன் ரெத்தம். சூரியனாய் திரண்டு,
கிழக்கைச் சிவக்கச் செய்யும்,
உன் மக்களையும் சிரிக்க வைக்கும்.
(சிந்திய...)

திலீபா; ! தியாகத் திருவுருவே,
பசி என் வயிற்றைப் புசிக்கும் போதெல்லாம்,
உன் நினைவுகள் என்னையும்ருசித்துக்கொண்டிருக்கும்.
வாழ்க உனது புகழ், வெல்க உனது
இலச்சியக் கனவுகள்

**மரியம் சகிலா ராசாத்தி**
காரைக்குடி, தமிழ் நாடு.

(வெரித்தாஸ் வனொலியில் 23.9.92
அன்று திலீபனின் ஐந்தாம் ஆண்டு

# திலீபனின்... நெஞ்சில் ஆடும் கதை வெல்வோம்!

நல்லூரின் வீதியிலே ...
நல்லதொரு யாகம்
வல்லவன் துணையால் - எம்
வல்லவனும் நடத்தினானே!
பாரதப் படைகளின்
பாதகச் செயலைப்
பார்த்திருக் கலாகுமோ?- தமிழன்
சோர்ந்திருக்கவும் கூடுமோ?
என்றமர்ந்த திலீபனவன்
தொடர்ந்தானே யாகமதை!
சுதந்திரப் பசியினை
சுமந்த தன் உணர்வால்
ஈரைந்து நாட்கள்
முடிவுற்றபோதும் - உடல்
அசைவற்றுப் போகையிலும்
தொடர்ந்தானே தன் யாகத்தை!
நயவஞ்சகப் படைகள்
நாட்டினில் வந்ததால்
நற்றமிழீழமே...
நலம் கெட்டு வாடிடவே.....
தம்பியரும் தங்கையரும் - உனைத்
தேடி வந்த அனைவருமே
விம்மி விம்மி அழுதனரே!
திலீபா...!
பக்கத்தில் இருந்தோரும்...
பதறி அழுதோரும்...
படமெடுத்து வைத்தோரும்...
இடம் விட்டு போகவில்லை, ஐயா!
உடன் நின்று வேங்கையுடன்
திடமெடுத்த உன் இலட்சியத்தை
நனவாக்க களம்பல கண்டுமே- இங்கு
படமாகத் தொங்கிட பலரை
காண்கிறோம்ஐயா!
ஐந்தாண்டு முடிந்தாலும் - உன்
நெஞ்சில் ஆடும் கதை வெல்ல - புலிப்
படை சேர வீரர் எல்லாம் காத்துள்ளனரே!
-வேலணையூர் சுரேஷ்-

# ஈக எரிமலை

கருவிகள் இல்லை,
வஞ்சகம் முன்னரே வளைத்துப் பேசி
வறுகிக் கொண்டது!
அமைதி வழி தேர்ந்தாய் -



நலம் கெட்டு வாடிடவே......
தம்பியரும் தங்கையரும் - உனைத்
தேடி வந்த அனைவருமே
விம்மி விம்மி அழுதனரே!

திலீபா...!
பக்கத்தில் இருந்தோரும்...
பதறி அழுதோரும்...
படமெடுத்து வைத்தோரும்...
இடம் விட்டு போகவில்லை, ஐயா!
உடன் நின்று வேங்கையுடன்
திடமெடுத்த உன் இலட்சியத்தை
நனவாக்க களம்பல கண்டுமே- இங்கு
படமாகத் தொங்கிட பலரை
காண்கிறோம்ஐயா!
ஐந்தாண்டு முடிந்தாலும் - உன்
நெஞ்சில் ஆடும் கதை வெல்ல - புலிப்
படை சேர வீரர் எல்லாம் காத்துள்ளனரே!

-வேலணையூர் சுரேஷ்-

## ஈக எரிமலை

கருவிகள் இல்லை,
வஞ்சகம் முன்னரே வளைத்துப் பேசி
வறுகிக் கொண்டது!
அமைதி வழி தேர்ந்தாய் -
அடடா, எரிமலைக்குஞ்சே,
உன் வசம் வந்ததில் அதுகூட
உன்னதம் பெறறு
விண்வரை கிளர்ந்தது பெரு நெருப்பாய்!
ஈகத்திரியிற் பொருத்திச் சுடர்
ஏற்றிவைத்தாய்,
பன்னிருநாட் பட்டினித்தீப்
பந்தப் பேரொளி.
பாரெங்கும் பரவிற்று;
பாரத மாயை இருளது சிதைந்தத -
கோர முகத்தினைப் புள்ளினம், புல்லினம்
அவை கூடப் புரிந்தன.
திலீபா!
இறுதி நொடிகளில்
உறுதிமிகு உன்மனக்
கண்கள் முன் எழுந்த
எண்ணத்திடம் எதுவோ?
சுதந்திர, சமதர்மத் தமிழீழம்
என்பதில் எவர்க்கு சந்தேகம் வரக்கூடும்?
என் முன்னே தெரிந்தது
என்னவென்று கேட்பாயா?
'கைத்தடியை நழுவவிட்டுக் காந்திமகான்
கைகட்டி, வாய்பொத்தி உன்முன்னே
மெய்மறந்து போதனை கேட்ட நிலை'

செ. பொ. சிவனேசு



(திலீபா ... நீ)

பன்னிரண்டு நாட்கள் சாவை மிஞ்சி,
சாதனை படைத்து, பட்டினியால் போர் தொடுத்த
பைந்தமிழ் ராஜாளியே,
உன் உதிர்ந்த சிறகுகள், ஒவ்வொரு நொடியும்,
உன் சாவின் குறிக்கோளைத் தொட்டு,
நீதி கேட்டு, பதிலடி கொடுக்கும்.

சிந்திய உன் ரெத்தம். சூரியனாய் திரண்டு,
கிழக்கைச் சிவக்கச் செய்யும்,
உன் மக்களையும் சிரிக்க வைக்கும்.
(சிந்திய...)

திலீபா; ! தியாகத் திருவுருவே,
பசி என் வயிற்றைப் புசிக்கும் போதெல்லாம்,
உன் நினைவுகள் என்னையும்ருசித்துக்கொண்டிருக்கும்.
வாழ்க உனது புகழ், வெல்க உனது
இலச்சியக் கனவுகள்

மரியம் சகிலா ராசாத்தி
காரைக்குடி, தமிழ் நாடு.

(வெரித்தாஸ் வனொலியில் 23.9.92 அன்று திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவாக ஒலிபரப்பாகிய கவிதை)

## தியாகதீபமானானே!

ஆயிரத் தொளாயிரத் தெண்பத் தேழில்
அந்நியப் படைகள்ஈ ழப்போர் தனை
அடக்கி யொடுக்கிய ழித்திட வெண்ணி
அழிப்பு வேலைகள் செய்தி நிம் வேளை

ஈழவர் மானம்காத் திடஇளை யவன்
அண்ணன் திலீபன் அகி மசைமயன் றொரு
ஆயுதம் ஏந்திக் கா விய நா யகனாய்
காந்தி தேசமெங்கும் அகிம்சை யுரைக்க

ஈழத் தமிழர்படு இன்னல் தன்னை
எட்டுத் திக்கும்முர சேற்றி வைத்திட
மன்னுயிர் வாழத்தன் னுயிர் மாழ
மாபெரு அகிம்சைவே ள்வியில் குதித்து

தேரோடும் வீதியில் ஈராறு நாளாய்
நீரோடும் கண்ணாய் உன்நாட்டவர் நிற்க
நீரின்றி யுணவின்றி நிலத்தாய் யுணவாகி
பாரம் தாங்கு சுமை தாங்கியா ய்சாய

காந்தி தேசம் ஏனோ இதனைக்
கண்டும் காணாதிரு ந்திடக் கண்டு
ஈழதே சம் சோகக் கடலில் மூழ்கிட!
திலீபன் தியாக தீபமானது! வரலாறு!

- சரசாலை யூரான்

## 12நாட்களும்60 மாதங்களும்


திலீபன் -
தமிழீழ தேசத்தின்
திருவிளக்கு

விழிக்குள் -
நிலவை வீழ்த்தி
புரட்சி
வழிக்குள்
தமிழீழத்தை
பூக்க வைத்த
அரசியல்
புலவன்

முள்முடி
மன்னர்களின்
முகமரைகைக்குள்
கள்வடியும் பூவாகி
இன்று
கவிதையானவன்

கல்லறைக்குள்
துயிலாமல்
விடுதலையின்
கருவறைக்குள்
விருப்புடன்
துயில்பவன்

-பு. திலிப்காந்த்







## சிந்தனைக்கு

உயர்ந்த இலட்சியத்திற்காக உயிர் துறப்போர் ஒருநாளும் தோற்பதில்லை.
- பைரன் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26- 09- 1992
தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தமிழ் மக்களின் உணர்வாகிய திலீபன்

விடுதலை வேள்வியில் தியாகி திலீபன் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும். தமது தேசத்தின் விடுதலைக்காக எந்த வகைத் தியாகத்தையும் எந்த வேளையிலும் விடுதலைப் புலிகள் செய்யத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை உலகிற்கு திலீபன்உணர்த்திய நாள் இது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 4500 க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களின் ஒவ்வொருவருடைய வரலாற்றிலும் ஒவ்வொரு வீரகாவியங்கள் புதைந்து கிடக்கின்றன. இதில் தேச விடுதலைக்காக கரும்புலி என தம்முயிர் ஈந்தவர்களும் உண்டு நேரடிச் சமர்களில் வீரச்சாவடைந்தவர்களும் உண்டு. ஆனால், விடுதலைப் புலிகளின் வரலாற்றில் தியாகி திலீபனின் தியாகம் வித்தியாசமானது. தமிழீழப் போராட்டத்தில் தனித்துவமானது. இதன் காரணமாக தியாகி திலீபன் தன்னுயிரை தற்கொடை செய்த நாளும் மிகவும் முக்கியமானதாகும்.

இந்தியாவிடம்தமிழீழம் பெற்றுத் தருமாறுதிலீபன் கோரவில்லை, தமிழரைப் பாதுகாக்கவெனக் கூறிக் கொண்டு வடக்கு - கிழக்கிற்குள் நுழைந்த இந்தியாவை உடன் படிக்கையில் தருவதாகக் கூறியவற்றையே பெற்றுத் தருமாறு கோரினான். தியாகி திலீபன் முன் வைத்த கோரிக்கைகள் ஐந்தும் இந்திய - சிறிலங்கா உடன் பாட்டிற்கு உட்பட்டவையாகவே இருந்தன. ஆனால், இந்தியா அதனைக் கருத்திற்கொண்டதாக இல்லை.

காந்தீயமே தனது தத்துவம், அகிம்சையே அதன் அடிப்படை. இவ்வாறு உலகில் பிரசாரம் செய்துவரும் இந்தியா தியாகி திலீபன் பன்னிரண்டு தினங்கள் உண்ணாநோன்பிருந்து இறக்கும்வரை

# உயிரினும் மேலானது

# எமது உரிமை, சுதந்திரம் கௌரவம்

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப்போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள் ஆனால் எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது; சாத்வீகப்போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடுஇணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன்புரிந்தான். அவனதுமரணம் ஒருமாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமானதிருப்பத்தைஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களுக்காக இறந்தான. உங்கள் உரிமைக்காக இறந்தான் உங்கள் பாதுகாப்பிற்காக உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான்நேசித்தமக்களுக்காகத் தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை. எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடி துடித்து செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என்ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னைஎரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சியநெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பார் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும், எமதுமக்களுக்கும் எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும். தமிழீழ மக்கள் தமது பாரம்பரிய தாய்ப் பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும். இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றதுஎன்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்குத் தெரியும்.

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்ல முடியாது முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்க சிங்களக் குடியேற்றம் துரித கதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர, அவசரமாக சிங்கள இனவாத அரச யந்திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுருவியது சமாதான ஒப்பந்தம்என்ற போர்வையில் சமாதனப் படையின் அனுசரணையுடன் சிங்களஅரசஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப் புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது. பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவே தான் பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீகமரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்நாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதுவர் தி.ந. டிக்ஸிட்டுக்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரசு ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வானொலி எம்மீது விசமத்தனமான பொய்ப்பிரசாரத்தை கட்ட விழ்த்து விட்டது. திலீபன் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லாதஉறுதிமொழிகளைத்தந்தார். வெறும்உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன் வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன். உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம்உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத் தூதர் மறுத்து விட்டார்.

எனது அன்பான மக்களே இந்திய அரசு எமது நியாயமானக்கோரிக்கைகளைப்புரிந்து காலந் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன்உயிர்பிழைத்திருப்பான். இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில்காலந் தாழ்த்தி வருகிறது. நாம் கேட்டுக் கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது. எம்மோடுகலந்தாலோசிக்காத ஓர் ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்போது ஆயுதங்களை ஒப்படைப்புப் பற்றி பேசுகிறது. போராட்டத்தை கைவிடச் சொல்லுகிறது.

நாம் உருப்படியான செயல்முறைத்திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளை போடுகிறது. இந்த சூழ்நிலையில் நாம் போராட்டத்தை கைவிடமுடியாது. மாறாக போராட்டத்தை தீவிரப்படுத்தவேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசிய எழுச்சியாக எமது போராட்டம் புரட்சிவடிவம் பெறவேண்டும்.

முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும்விடுதலைப் புலி வீரர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். வடக்கு, கிழக்கு அங்கிலுமுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்றுதிரண்ட சக்தி மூலமே, மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடுஇணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்.



6-9-87இல் திலீபன் தியாகமடைந்தார். தியாக திலீபம் அணைந்ததையொட்டி தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையினை இங்கே தருகின்றோம். இவ் அறிக்கை தமிழீழ மக்களுக்கு பல விடயங்களைத் தெளிவுபடுத்தியது. மக்களைப் போராட்டத்திற்கு அணிதிரள வைக்கும் அறைகூவலாக விளங்கியது.

இன்று

குடாநாட்டில்

அக்காச்சி

லாற்றில் தியாகி திலீபனின் தியாகம் வித்தியாசமானது. தமிழீழப் போராட்டத்தில் தனித்துவமானது. இதன் காரணமாக தியாகி திலீபன் தன்னுயிரை தற்கொடை செய்த நாளும் மிகவும் முக்கிய மானதாகும்.

இந்தியாவிடம்தமிழீழம் பெற்றுத் தருமாறுதிலீபன் கோரவில்லை, தமிழரைப் பாதுகாக்கவெனக் கூறிக் கொண்டு வடக்கு - கிழக்கிற்குள் நுழைந்த இந்தியாவை உடன் படிக்கையில் தருவதாகக் கூறியவற்றையே பெற்றுத் தருமாறு கோரினான். தியாகி திலீபன் முன் வைத்த கோரிக்கைகள் ஐந்தும் இந்திய - சிறிலங்கா உடன் பாட்டிற்கு உட்பட்டவையாகவே இருந்தன. ஆனால், இந்தியா அதனைக் கருத்திற்கொண்டதாக இல்லை.

காந்தீயமே தனது தத்துவம், அகிம்சையே அதன் அடிப்படை. இவ்வாறு உலகில் பிரசாரம் செய்துவரும் இந்தியா தியாகி திலீபன் பன்னிரண்டு தினங்கள் உண்ணாநோன்பிருந்து இறக்கும்வரை அதுகுறித்து அக்கறை எதுவும் காட்டவில்லை. அதாவது காந்தியின் இறந்தஉடலுடன் சேர்த்து காந்தீயத்தையும் இந்திய அரசியல் வாதிகள் புதைத்துவிட்டனர்.

தியாகி திலீபன் உண்ணாநோன்பு ஆரம்பித்த வேளை இந்தியா தனது கோரிக்கையை நிறைவேற்றும், தன் உயிர் பிழைக்கலாம் என்ற அற்பத்தனமான சிந்தனை எதையும் கொண்டிருக்கவில்லை. இந்தியா தமிழீழ மக்களுக்கு அநீதி இழைத்துவிட்டது. இந்தியா உலகிற்கு கூறும் அகிம்சை என்பது போலியானது, என்பதை தெளிவாகவே உணர்ந்திருந்த தியாகி திலீபன் தன் உயிரை தற்கொடை செய்தேனும் இந்தியாவின் உண்மைச் சொரூபத்தை உலகிற்கு காட்டவும். இந்தியாவின் கொரூர முகத்தை தமிழீழ மக்களுக்கு காட்டவுமே தனது உயிரைத் தற்கொடை புரிந்தான். அதாவது இந்தியாவினால் தமிழ் மக்களுக்கு வரக்கூடிய அபாயத்தை முன் கூட்டியே தமிழ் மக்களுக்கு உணர்த்தினான்.

அதேவேளை, தனது இறப்பின் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டம் எழுச்சிபெறும், ஆயிரம் ஆயிரமாக இளைஞர்கள் திரள்வார்கள், மக்கள் புரட்சிவெடிக்கும், தமிழீழம்மலரும் என அவன்எண்ணினான். தன் இறப்பின் மூலம் தன் தேசத்திற்குப் பெரும் தொண்டாற்ற எண்ணினான். இதனைத் தனது இறுதிப் பேச்சுக்களின் போதே தியாகி திலீபன் தெரிவித்தான்.

தியாகி திலீபனின் இவ் இறுதி உணர்வுகளை இன்றைய இளைய தலைமுறையினர் பற்றியேநிற்கின்றனர். ஆயிரக்கணக்கில் இளைஞர்களும் யுவதிகளும் தலைவர் பிரபாகரன் தலைமையில் அணிதிரண்டு நிற்கின்றனர் இவர்கள் இந்திய அரசிற்கு எதிராக நடத்திய இரண்டாண்டுப் போரினால் தோல்விகண்டுஇந்தியாஅவமானகரமாகவெளியேறியது. சிறிலங்கா இராணுவத்திற்கு கொடுத்துவரும் பலமான அடிகள் அவர்களை கதிகலங்கச் செய்துள்ளது. இதேவேளை திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சியில் தமிழீழ மக்கள் உணர்வு பூர்வமாக ஆற்றிவரும் பங்களிப்பு மக்கள் புரட்சிக்குநீண்டதூரமில்லைஎன்பதைவெளிச்சமிட்டுக்காட்டுகின்றது.

---

ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களுக்காக இறந்தான. உங்கள் உரிமைக்காக இறந்தான் உங்கள் பாதுகாப்பிற்காக உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான்நேசித்தமக்டிருக்கும் ஒரு இலட்சியநெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதர் கூறியிருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பார் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

இதற்கு ஏற்ற ஒரு முற்றுப்புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப்பிரச்சினையில் தலையிட்டது. பாரதம் தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாத மளித்தது. பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவே தான் பாரதத்துடன் தர்ம யுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீகமரபில்கொச்சைப்படுத்தியது. ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லாதஉறுதிமொழிகளைத்தந்தார். வெறும்உறுதிமொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது. உருப்படியான திட்டங்களை முன் வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள். அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது என்றேன். உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம்உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிபுரட்சிவடிவம் பெறவேண்டும்.

முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும்விடுதலைப் புலி வீரர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். வடக்கு, கிழக்கு அங்கிலுமுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் புலிகள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே, மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடுஇணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்.

---

## இன்று

லும் ஏனைய புறநகர்ப்பகுதிகளிலும் வீதி பவனியாக எடுத்துச் செல்லப்பட்ட காட்சி தமிழீழ எழுச்சிக்கு உரமூட்டுவதாக அமைந்தது. அதனுடன் பறவைக் காவடிகளும் திலீபனின் ஞாபகார்த்தமாக வீதிபவனியாக சென்றதை அவதானிக்க முடிந்தது.

'தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்து தியாக மரணமடைந்த புனித இடமான நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானமும் அதனை அண்டிய பகுதிகளும் மின் விளக்குகளாலும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தகாட்சி எழிச்சியின் உச்ச எல்லைக்கு அழைத்துச் சென்றது மொத்தத்தில் தமிழீழமே எழுச்சிக் கோலமாக காட்சி கொடுக்கிறது. (க)

## பூநகரி

அதேவேளைவிமானப்படையின் உலங்கு வானூர்திகள் மேற்படி பகுதிகளை நோக்கி வட்டமிட்டு கலிபர் தாககுதல்களை நடாத்தியவண்ணம் இருந்தன. இத் தாக்குதல்களால் மேற்படி பகுதிகளை அண்டிய குடியிருப்புக்களில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர் [க[

## லெப். கேணல் சுபன்

பன்னீர்ச் செல்வன் (சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ் டானியல் கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார்), 2-ம் லெப்டினன்ட் சுருளி (நவரட்ணம் ரவி, அப்துல் காசிம் வீதி 1-ம் வட்டாரம் மூதூர் திருமலை), வீரவேங்கை வெடியரசன் (இராமப்பிள்ளை மகாலிங்கம் ஞானிமடம் பூநகரி) ஆகிய ஆறு போராளிகளுக்கும்தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## குடாநாட்டில்

தமிழீழ காவற்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் உண்ணாவிரதத்தை நிறைவு செய்து வைப்பார்.

மாலை 4 30 மணிக்கு மாபெரும் பொதுக் கூட்டமும் நினைவுரைகளும் சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து 7 30 மணிக்கு சின்னமணி குழுவினரின் வில்லிசையுடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. கலைநிகழ்ச்சியில் ''தியாகி திலீபன்'' வில்லிசையும் ''தியாக தீபம்'' நாட்டிய நடகமும் இடம் பெறவுள்ளன.

## தென்மராட்சிகோட்டம்

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வுகள் தென்மராட்சி கோட்டத்தில் கோட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு வெற்றிச்செல்வன் தலைமையில் நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது

தென்மராட்சி விசேட தளபதி திரு குணா அவர்களால் காலை 7.00 மணிக்கு ஈகைச் சுடர் ஏற்றப்படுவதைத் தொடர்ந்து தென்மராட்சி தளபதி திரு. பரணி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைப்பார்.

மௌன அஞ்சலியுடன் காலை 8.00 மணிக்கு தென்மராட்சி கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு கந்தண்ணா உண்ணா விரதத்தை ஆரம்பித்து வைப்பார் காலை 10.48 மணிக்கு திலீபன் தியாக மரணமடைந்தவேளை அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்துவர். இதன் பின் கவிதா நிகழ்வுகளும் உரைகளும் நடைபெறவுள்ளன. இறுதியாக யாழ். மாவட்ட உதவி அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. தங்கன் உண்ணா நோன்பை முடித்து வைப்பார்.

மாலை 4.00 மணிக்கு நினைவுரைகளும் சிறப்புரைகளும் இடம் பெற்றதும் கலை நிழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## அக்காச்சி

விழா நிகழ்ச்சிகளாக விடுதலைப் புலிகளின் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன

இவர்களது சிறப்புரையைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளாக வில்லிசை. நாடகம் ஆகியன இடம்பெறுகின்றன (ச)

## விடியும்வரை

தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் சிறிலங்கா ராணுவ அதிகாரிகள் பாளிக்குடா ராணுவமுகாம் தாக்குதலில் பல இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## வடமராட்சிக் கோட்டம்

வடமராட்சி கோட்ட மட்ட இறுதி நாள் உண்ணாவிரதம் இன்று 26 ஆம் திகதி மாவிச்சந்தி ஆலய முன்றலில் காலை 7 மணக்கு ஆரம்பமாகும்.

பருத்தித்துறை வட்ட பிரிவுப்பகுதி மக்கள் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்தும், கரவெட்டி வட்ட அவைப்பகுதி மக்கள் மூத்த விநாயகர் ஆலயத்திலிருந்தும் தியாகி திலீபனின் உருவப்படத்தை தாங்கிய வண்ணம் ஊர்வலமாக மாவிச்சந்தியை சென்றடைவர்.

பிற்பகல் 4. 30 மணிக்கு வடமராட்சி வடக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு புவியரசன் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகும். தேசியக் கொடியை வடமராட்சி தளபதி திரு செல்வமும், ஈகைச் சுடரை வடமராட்சி மகளிர் பிரிவு பொறுப்பாளர் தணிகைச்செல்வியும் ஏற்றி வைப்பர். இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (82, ச, க)

# இந்தியப் பிரதமர் ராவ் பிரான்ஸ் செல்லவுள்ளார்

(டில்லி)

பிரான்சில்மூன்றுநாள் அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் பி. வி நரசிம்மராவ் திங்களன்று புறப்படவுள்ளார்.

இந்திய — பிரான்சு பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதும் பிரான்சில் முதலீட்டை ஈர்ப்பதும், இந்த விஜயத்தின் நோக்கம் என்று கூறப்பட்டுள்ளது.

பிரான்சில் தங்கியிருக்கும் போது பிரான்ஸ் அதிபர் மித்ரோவ் மற்றும் பிரான்ஸ் பிரதமர் ஆபெரோருடனும் நரசிம்மராவ் பேச்சு நடத்த உள்ளார்.

அத்துடன் ஐரோப்பாவில் இருக்கும் இந்தியத் தூதுவர்களின் கூட்டமொன்றிலும் நரசிம்மராவ் உரை நிகழ்த்தவுள்ளார்.

## லெப். கேணல்

மாலை 3 00மணி தொடக்கம் 3-30 மணி வரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

பின்னர் அங்கிருந்து கலிகைச்சந்தி. கனகம் புளியடிச் சந்தி வழியாக எடுத்துவரப்பட்டு நுணாவில் 190 ஆம் கட்டையடியில் மாலை 5-30மணி முதல் 6 00மணி வரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

பின்னர் சாவகச்சேரி கொடிகாமம் எழுதுமட்டுவாள் ஊடாக கிளாலிக்கு எடுத்துச் செல்லப்படும்.

## கருத்துச்

தொழிற்சங்கங்களின் உரிமைகளுக்கும், பேச்சுச் சுதந்திரத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக இருக்கின்றது எனத் தொழிற்சங்கங்களும், மனித உரிமை காப்பு அமைப்புக்களும் கருதுகின்றன.

அவசரகாலச் சட்டங்களின் பிரகாரம் எழுத்துச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம், விளம்பர அட்டைகள், விளம்பரங்கள் குறித்த ஓவியங்கள். சுவரொட்டிகள், கருத்து வெளியிடும் சகல சாதனங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன

நடைமுறையிலுள்ள அவசர காலச்சட்ட விதிகள் நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை அடக்குவதற்காகவே என்று இதுவரை கூறப்பட்டது. இப்போது இவை ஏற்றுமதித் துறையிலும் கைவைப்பதால் தொழிற்சங்கங்களும், மனித உரிமைகாப்பு அமைப்புக்களும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன

ஏற்றுமதித் துறையைமுடக்க அரசுக்கு எதிரான அமைப்புக்கள் விளம்பரத்தைப் பயன்படுத்தலாம் என்பதால் தான் இந்தப் புதியவிதிமுறை என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது மேலும் 1987 இல் ஜே வி பியினர் தொழிற்சாலைகளை மூடும்படி விளம்பரங்களையும், சுவரொட்டிகளையும் பயன்படுத்தியதாகவும், இப்போது மீண்டும்அந்த இயக்கம் தலைதூக்கியுள்ளதால் அதற்கு முன்னெச்சரிக்கையாகவே விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த விதிகள் என்று அரசு நியாயம் காட்டியுள்ளது

ஆனால் அந்த விதிகள் சுதந்திர வர்த்தக வலையங்களையும், புதிய தொழில் முயற்சிகளையும், தற்போது உள்ள வெளிநாடு சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளையும்பெரிதும் பாதிக்குமென தொழிலாளர் ஐக்கிய அமைப்பின் பொதுச் செயலர் எச் ஏ செனிவரெட்னாவின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.


# ஈழநாதம்

# பூநகரியில் வீரகாவியம் படைத்தோர்


லெப். தமிழேஸ்வரன்


லெப். அறிவுடையான்


2ம் லெப்.
பன்னீர்ச்செல்வன்


2ஆம் லெப். சுருளி

## அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு முதலாம் ஆண்டு நிறைவுவிழா

(நமது நிருபர்)

வாதரவத்தை கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மேற்படி குடியிருப்பு பலவர்ண மின் விளக்குகளாலும் மஞ்சள், சிவப்பு நிற கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது.

யாழ் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய கிராமமான பொக்கணை எனும் கிராமம் விடுதலைப் புலிகளால் சகல வசதிகளும் நிறைந்த கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பாக உருவாக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

இதனைக் குறிக்கும்முகமாக இன்று இரவு 7.30 மணிமுதல் மேற்படி குடியிருப்பு விளையாட்டு திடலில் பொதுக் கூட்டமும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. சிறீகுமார் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

மாலை ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் படத்திற்கு மலர்மாலை அணிந்ததும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

மேற்படி குடியிருப்பு நிறைவு

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 25-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5846

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்
42-9220, 41-8467, 24-5967, 26-1658, 41-5583, 26-7525, 24-5939, 24-4238, 22-6666, 24-5041, 26-6775, 42-9625, 24-5015, 42-1293, 26-9797, 24-4384, 27-1187

## காகிதாதிகளுக்கு தடை


(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்திற்குத் தேவையான அளவு காகிதாதிகளை எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் (ஜே. ஓ. சி) அனுமதி வழங்க மறுத்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ். கல்வித் திணைக்களத் தேவைகளுக்கு என கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட காகிதாதிகள் யாழ்ப்பாணம் எடுத்து வர மறுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (42

---

பூநகரி சிறிலங்கா இராணுவமுகாம் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்டவெற்றிகர தாக்குதலில் ஆறுபோராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களில் லெப். கேணல் சுபன் தவிர்ந்த ஏனைய ஐந்து போராளிகள்.


வீரவேங்கை
வெடியரசன்

## ஆந்திராவில் கண்ணிவெடி 12 படையினர் பலி

ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கண்ணிவெடி தாக்குதல் ஒன்றில் எல்லைக் காவல் படையைச் சேர்ந்த பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் வாராங்கல் மாவட்டத்தில் சாலக்குறிச்சி கிராமம் அருகே நடைபெற்ற இத் தாக்குதலில் மேலும் பத்துப் பேர் காயமடைந்தனர். வான் ஒன்றுக்கு பின்னே சென்றுகொண்டிருந்த ஜீப் கண்ணி வெடிக்குள் சிக்குண்டது.

## 4-ம் ஆண்டு நினைவலைகள்

வீரஜனனம்

11.10.1962

வீரச்சாவு

26.09.1988



### மேஜர் சுரேந்திரன்

[காளிராசா ஸ்ரீ பாஸ்கர்]

தன்னலம் கருதாத
தலைமையின் பின்னே
வீறு கொண்டெழுந்த
இளம் வேங்கையே
தமிழீழ மண்மீட்புப் போரினிலே
உன்னுயிரை அர்ப்பணித்தாயடா
உனது வீர இலட்சியம்
ஈடேற பிரார்த்திக்கின்றோம்.

உப்பு வெளி,
திருக்கோணமலை.

திருமலை மக்கள்
( 3277 )


## 400பேர்விண்ணப்பம்

சிறிலங்கா இராணுவத்திற்கு என இரண்டாயிரம் வெற்றிடங்களை நிரப்பவென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு 400 பேர் மட்டும் வந்திருந்ததாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என இத் தகவலை வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தானொரு காவியமாகிய தனயன்

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்





வீரவேங்கை
வெடியரசன்

## 400பேர்விண்ணப்பம்

சிறிலங்கா இராணுவத்திற்கு என இரண்டாயிரம் வெற்றிடங்களை நிரப்பவென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு 400 பேர் மட்டும் வந்திருந்ததாக பெயர் குறிப்பிட விரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என இத் தகவலை வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

26 . 09 . 1958

## மேஜர் சுரேந்திரன்
[காளிராசா ஸ்ரீ பாஸ்கர்]

தன்னலம் கருதாத
தலைமையின் பின்னே
வீறு கொண்டெழுந்த
இளம் வேங்கையே
தமிழீழ மண்மீட்புப் போரினிலே
உன்னுயிரை அர்ப்பணித்தாயடா
உனது வீர இலட்சியம்
ஈடேற பிரார்த்திக்கின்றோம்.

உப்பு வெளி,
திருக்கோணமலை.

திருமலை மக்கள்
(3277)



# லெப். கேணல் திலீபன்
## (இராசையா பார்த்திபன்)


உண்ணாநோன்பு: 15-09-1987 - 26-09-1987

தண்ணீர்த் தாகத்தோடா திலீபன் போனான் — இல்லையே
தமிழீழத் தாகத்தோடு போனான்
நாம் ஒன்றுசேர்ந்து தமிழீழத்தை மீட்பதே திலீபனின் தாகத்தை தீர்க்கும்.

(சி-5119)

- வலிகாமம் வாழ் மக்கள்

# உத்தமனே திலீபா !!



ஈரேழு உலகை
நாம் பார்த்தறியோம்
உன் தியாகத்தால்
ஊரெழுவையின்று
உலகறியச் செய்து விட்டாய்
உத்தமனே திலீபா !

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## தென்மராட்சிக் கல்விக் கோட்டம்

சாவகச்சேரி.

(3279)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.